**மார்ச் – 21**

# தேசியச் செய்திகள்

## தகுதிநீக்கம் செய்யக் கோரப்பட்ட மனு

- உச்சநீதிமன்ற வரலாற்றில் முதன்முறையாக, மணிப்பூர் மாநில அமைச்சரான தொனுவோஜாம் சியாம்குமார் என்பவரை அம்மாநில அமைச்சரவையிலிருந்து உச்சநீதிமன்றம் நீக்கியுள்ளது.
- மேலும் இந்திய உச்சநீதிமன்றமானது இவரை அம்மாநில சட்டசபைக்குள் நுழையவும் தடை விதித்துள்ளது.

*பின்னணி*

- சியாம் குமார் என்பவர் 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற மணிப்பூர் மாநில சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின் அம்மாநில நகரத் திட்டமிடல், வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராகப் பொறுப்பேற்பதற்காக பாஜக கட்சியில் இணைந்தார்.
- அம்மாநிலத்தின் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களால் இவரைத் தகுதி நீக்கம் செய்யக் கோரப்பட்ட மனுக்கள் 2017 ஆம் ஆண்டு முதல் அம்மாநில சட்டமன்ற சபாநாயகரிடம் நிலுவையில் இருந்து வருகின்றது.
- இந்த விவகாரம் தொடர்பாக உச்சநீதிமன்றத்திடம் முறையிடப்பட்ட போது, இந்திய உச்சநீதிமன்றம் சரத்து 142ஐப் பயன்படுத்தி அம்மாநில அமைச்சரவையிலிருந்து (கேபினேட்) இவரை நீக்கியது.
- சரத்து 212ன்படி, உச்சநீதிமன்றம் உள்பட இந்தியாவில் உள்ள எந்தவொரு நீதிமன்றமும் மாநில சட்டமன்றத்தின் உள் விவகாரங்களில் தலையிட முடியாது.
- இந்திய உச்சநீதிமன்றமானது சரத்து 142ஐப் பயன்படுத்தி தனது கீழ் உள்ள விவகாரங்களில் "முழுமையான நீதியை" நிலைநாட்டுவதற்காக ஓர் உத்தரவைப் பிறப்பிக்கலாம்.

## மாநிலப் பேரிடர் மீட்பு நிதி

- மாநிலப் பேரிடர் மீட்பு நிதியின் (SDRF – State Disaster Response Fund) மூலம் நிதியுதவியை அளிக்கும் நோக்கத்திற்காக கோவிட் – 19 நோயை "அறிவிக்கப்பட்ட பேரிடராக" அறிவிக்க மத்திய உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- இந்த நிதியானது பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005-ன் கீழ் அந்தந்த மாநிலங்களால் அமைக்கப் பட்டுள்ளது. இது "அறிவிக்கப்பட்ட பேரிடர்களை" கையாளுவதற்காக மாநில அரசுகளிடம் இருக்கும் ஒரு முதன்மையான நிதி ஆதாரமாகும்.
- இந்த நிதியானது 13வது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஏற்படுத்தப் பட்டுள்ளது.
- பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், மாநில அரசுகள்/ஒன்றியப் பிரதேசங்கள் மாநில அரசிடம் இருந்து பெறப்படும் நிதியைத் தவிர, கூடுதலாக மாநிலப் பேரிடர் மீட்பு நிதியிலிருந்தும் நிதியைப் பெற முடியும்.
- இச்சட்டத்தின்படி, மாநிலப் பேரிடர் மீட்பு நிதியானது 2005 ஆம் ஆண்டின் பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் "அறிவிக்கப்பட்ட பேரிடர்களுக்கு"

மட்டுமே பயன்படுத்த முடியும்.

- பொதுப் பிரிவு மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்களுக்கான SDRF நிதி ஒதுக்கீட்டிற்கு மத்திய அரசு 75 சதவிகித நிதியையும் வடகிழக்கு மாநிலங்கள், சிக்கிம், இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் ஆகிய மாநிலங்கள் உள்ளிட்ட சிறப்புப் பிரிவு மாநிலங்களுக்கான SDRF நிதி ஒதுக்கீட்டிற்கு மத்திய அரசு 90 சதவிகித நிதியையும் அளிக்கும்.
- SDRF ஆனது "ஒதுக்கப்பட்ட நிதியின்" கீழ் பொதுக் கணக்கில் உள்ளது.
- ஆனால் நேரடிச் செலவினங்களை பொதுக் கணக்கு நிதியிலிருந்து மேற்கொள்ளக் கூடாது.
- SDRFற்கு மத்திய அரசு கொடுக்கும் நிதி "உதவியாகக் கொடுக்கும் நிதியாக" கருதப் படும்.
- மத்திய உள்துறை அமைச்சகமானது SDRF-ன் செயல்பாடுகளை மேற்பார்வையிடும் தலைமை அமைச்சகமாகும். மேலும் இது குறிப்பிடப்பட்ட விதிமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதையும் கண்காணிக்கும்.
- இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) ஒவ்வொரு ஆண்டும் SDRFஐ தணிக்கை செய்கின்றார்.
- சூறாவளிகள், வறட்சி, சுனாமி, ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பனிப்பாறைச் சரிவுகள், பூச்சித் தாக்குதல்கள் போன்றவை SDRFன் கீழ் உள்ளடங்கும்.
- பேரிடர் சார்ந்த 31 பிரிவுகள் முக்கியமான 5 துணைக் குழுக்களின் கீழ் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன. அவையாவன: நீர் மற்றும் காலநிலை தொடர்பான பேரிடர்கள், புவியியல் சார்ந்த பேரிடர்கள், இரசாயன, தொழிற்துறை மற்றும் அணு ஆயுதம் தொடர்பான பேரிடர்கள், உயிரியல் சார்ந்த பேரிடர்கள் (உயிரியல் பேரிடர்கள் மற்றும் தொற்று நோய்கள்) ஆகியவையாகும்.

***தற்போதைய நிலை***


- கரோனா வைரஸ் நோயை எதிர்த்துப் போராடுவதற்காக நிதியை ஒதுக்கிய இந்தியாவின் முதலாவது மாநிலம் ஒடிசா ஆகும்.
- ஒடிசா மாநிலமானது இந்தக் கொடிய நோயை எதிர்த்துப் போராடுவதற்காக ரூ.200 கோடியை ஒதுக்கியுள்ளது.
- இந்தக் கொடிய நோயை எதிர்த்துப் போராடுவதற்காக தமிழ்நாடு அரசு ரூ.60 கோடியை ஒதுக்கியுள்ளது.

## இடது சாரித் தீவிரவாதம் – குறைவு

- கடந்த 5 ஆண்டுகளில் இடது சாரித் தீவிரவாதம் (LWE – Left Wing Extremism) குறைந்துள்ளதாக மத்திய உள்துறை இணையமைச்சர் அறிவித்துள்ளார்.
- இடது சாரித் தீவிரவாதம் குறைந்ததற்கு முக்கியமான காரணம் "தேசியக் கொள்கை மற்றும் செயல் திட்டம் 2015" என்ற திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதாகும்.
- 2019 ஆம் ஆண்டில், LWE-ன் எண்ணிக்கையானது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது 38 சதவிகிதம் என்ற அளவாகக் குறைந்துள்ளது.
- இந்த அமைப்புகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் எதிர்வினை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவை 1967 ஆம் ஆண்டின்

இந்தியாவின் சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தால் நிர்வகிக்கப் படுகின்றது.

- இந்த பகுதிகளில் பரவியுள்ள நக்சலைட் மற்றும் மாவோயிஸ்ட் ஆகிய அமைப்புகள் இச்சட்டத்தின் கீழ் தீவிரவாதக் குழுக்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.
- சிவப்புப் பிராந்தியமானது (Red Corridor) இந்தியாவின் தெற்கு, மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.
- இது ஆந்திரப் பிரதேசம், பீகார், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, தெலுங்கானா, மேற்கு வங்காளம் மற்றும் கிழக்கு உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியுள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

## பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை

- பயிர்களைன் உற்பத்தி விலையின் 1.5 மடங்கு என்ற அளவிற்கு குறைந்தபட்ச ஆதார விலை (MSP – Minimum Support Price) நிர்ணயித்தலுடன் ஒன்றிப் பொருந்தும் வகையில் நெல், கோதுமை மற்றும் பருப்பு வகைகள் உள்ளிட்ட 2019-20 ஆம் ஆண்டின் காரிப் மற்றும் ராபி காலப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு அதிகரித்துள்ளது.
- மத்திய அரசானது மாநில அரசுகள்/சம்பந்தப்பட்ட மத்திய அரசுத் துறைகள் மற்றும் இதரக் காரணிகளைக் கருத்தில் கொண்டு, விவசாயப் பொருட்களின் விலைகளுக்கான ஆணையத்தின் பரிந்துரைகளின் (CACP - Commission for Agricultural Costs & Prices) அடிப்படையில் கோதுமை, பருப்பு, எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட 22 பயிர் வகைகளுக்கு MSPஐ நிர்ணயித்துள்ளது.
- இது தவிர, டோரியா மற்றும் உறிக்கப்படாத தேங்காய் ஆகியவற்றிற்கான MSP ஆனது முறையே கடுகு, மற்றும் கொப்பரைத் தேங்காய் ஆகியவற்றின் MSPயின் அடிப்படையில் நிர்ணயிக்கப் படுகிறது.

- CACP ஆனது MSPஐப் பரிந்துரைக்கும் போது பின்வருவனவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்கின்றது. அவையாவன உற்பத்தி விலை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பல்வேறு பயிர்களுக்கான ஒட்டுமொத்தத் தேவை மற்றும் விநியோக நிலை, உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு விலைகள், பயிர்களுக்கிடையேயான விலைச் சமநிலை, விவசாயம் மற்றும் விவசாயம் சாராத துறைகளுக்கிடையேயான வர்த்தக முறைகள், பொருளாதாரத்தின் விலைக் கொள்கையின் தாக்கம் (மற்ற துறைகளில்), நிலம், நீர் மற்றும் இதர உற்பத்தி வளங்களின் திறனுள்ள பயன்பாடு மற்றும் பயிரின் உற்பத்தி விலையை விட குறைந்தபட்சம் 50% அதிக வரம்பு ஆகியவையாகும்.
- டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலான தேசிய விவசாயிகள் ஆணையமானது பயிரின் சராசரி உற்பத்தி விலையை விட MSP ஆனது 50 சதவிகிதம் அதிகமாக இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

**PRICE CHART**

Kharif MSP of major crops in 2019-20 (in ₹/quintal)

| Crop | 2018-19 | 2019-20 | % Increase |
|---|---|---|---|
| Paddy (common) | 1,750 | 1,815 | 3.71 |
| *Jowar* (Hybrid) | 2,430 | 2,550 | 4.9 |
| *Bajra* | 1,950 | 2,000 | 2.56 |
| Maize | 1,700 | 1,760 | 3.52 |
| *Arhar* (Tur) | 5,675 | 5,800 | 2.20 |
| *Moong* | 6,975 | 7,050 | 1.07 |
| Groundnut | 4,890 | 5,090 | 4.08 |
| Soybean (yellow) | 3,399 | 3,710 | 9.14 |
| Cotton (medium staple) | 5,150 | 5,255 | 2.03 |
| Cotton (long staple) | 5,450 | 5,550 | 1.83 |

Note: The kharif marketing season runs from July to June
Source: Government

**Proposed MSP for Rabi Crops**

(2019-20)

| Crops | Existing MSP (in Rs/quintal) | Proposed MSP (in Rs/quintal) | % Hike |
|---|---|---|---|
| Wheat | 1,840 | 1,925 | 4.61 |
| Barley | 1,440 | 1,525 | 5.9 |
| Mustard | 4,200 | 4,425 | 5.35 |
| Masur | 4,475 | 4,800 | 7.26 |
| Safflower | 4,945 | 5,215 | 5.4 |

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சாத்தியமுள்ள மீன்பிடி மண்டலம்

- சாத்தியமுள்ள மீன்பிடிப் பகுதிகள் குறித்த சாத்தியமுள்ள மீன்பிடி மண்டல ஆலோசனை அடங்கிய தொகுப்பை உருவாக்குவதற்காக Oceansat செயற்கைக்கோள் தரவு பயன்படுத்தப்படும் என்று கடல்சார் தகவல் சேவைகளுக்கான இந்தியத் தேசிய மையம் அறிவித்துள்ளது. இந்த ஆலோசனையானது அனைத்து மாநிலங்களிலும் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு வழங்கப்பட இருக்கின்றது.
- இந்த முறையானது இஸ்ரோவின் Oceansat-2 செயற்கைக் கோளிலிருந்து பெறப்படும் பச்சையத்தின் செறிவு குறித்த தரவையும் தேசியக் கடல்சார் வளிமண்டல நிர்வாகத்திடமிருந்து (NOAA/அமெரிக்க செயற்கைக்கோள்) பெறப்படும் கடல் மேற்பரப்பு வெப்பநிலை குறித்த தரவையும் பயன்படுத்துகின்றது.
- பேரிடர் முன்னெச்சரிக்கை குறித்த அவசரக் காலத் தகவல்களைத் தடையற்ற, திறனுள்ள முறையில் பரப்புதல், சாத்தியமுள்ள மீன்பிடி மண்டலங்கள் மற்றும் கடலின் நிலை குறித்து மீனவர்களுக்கு அறிவித்தல் ஆகியவற்றிற்காக மத்திய அரசு, ககன் செயற்கைக்கோளால் செயல்படுத்தப்படும் மாலுமிகளின் கண்காணிப்பு மற்றும் தகவல் சாதனம் என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.

### எச்ஜவி எதிர்ப்பு மருந்துகள் – கோவிட் 19

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகமானது கோவிட் – 19 என்ற தொற்றுநோய்க்கான மருந்துகள் மேலாண்மை மீதான திருத்தப்பட்ட அறிவுரைகளை வெளியிட்டுள்ளது.
- கரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டுள்ள நபரின் நிலையை (கடுமையான நிலை) பொறுத்து லோபினாவிர் மற்றும் ரிட்டோனாவிர் (கலேத்ரா என்ற குறியீட்டுப் பெயரின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றது) ஆகிய கலப்பு மருந்துகளைப் பயன்படுத்த இந்த அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.
- இந்தக் கலப்பு மருந்தின் பயன்பாடானது அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர்கள், தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையத்தைச் சேர்ந்த வல்லுநர்கள் மற்றும் உலகச் சுகாதார அமைப்பைச் சேர்ந்த வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்ட வல்லுநர் குழுவினால் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
- லோபினாவிர் – ரிட்டோனாவிர் மருந்துகள் நீரிழிவு நோய், சிறுநீரகச் செயலிழப்பு, நாள்பட்ட நுரையீரல் நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள 60 வயதிற்கும் மேற்பட்ட அதிக ஆபத்தை எதிர்நோக்கியுள்ள நோயாளிகள் மற்றும் அதிக நோய் எதிர்ப்புச் சக்தி தேவைப்படும் நோயாளிகளுக்குப் பரிந்துரைக்கப் படுகின்றது.
- லோபினாவிர் – ரிட்டோனாவிர் ஆனது பெரும்பாலும் எச்ஜவி தொற்றைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப் படுகின்றது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### டனுபே-ஒடர்-எல்பி கால்வாய்

- டனுபே-ஒடர்-எல்பி கால்வாயானது டனுபே, ஒடா மற்றும் எல்பி ஆகிய 3 நதிகளை இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கருப்புக் கடலிலிருந்து பால்டிக் மற்றும் வடக்குக் கடல் வரையிலான பயணத்திற்கான மாற்றுக் கடல்வழிப் பாதையை அளிக்கின்றது.
- இருப்பினும் இந்தக் கால்வாயின் கட்டுமானத்திற்கு எதிராக பல்வேறு கருத்துக்கள் சுற்றுச்சூழல் அமைப்புகளால் எழுப்பப்பட்டு வருகின்றன.

## மாநிலச் செய்திகள்

### ரோபேக்ஸ் (ROPAX)

- மத்தியக் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகமானது மும்பை மற்றும் மண்டாவா (மகாராஷ்டிரா) ஆகியவற்றிற்கு இடையே “ரோபேக்ஸ்” என்று அழைக்கப்படும் “ரோல் ஆன் – ரோல் ஆப்” எனப்படும் கப்பற் பயணச் சேவையைத் தொடங்கியுள்ளது.
- மும்பை மற்றும் மண்டாவா ஆகியவற்றிற்கு இடையேயான சாலைத் தொலைவானது 110 கிலோ மீட்டர்களாகும். இதைக் கடக்க எடுத்துக் கொள்ளும் நேரம் 3 முதல் 4 மணி நேரமாகும். கடல்வழியின் மூலம் இதன்

தொலைவு 18 கிலோ மீட்டர்களாகும். இதன் பயண நேரம் 1 மணி நேரமாகும்.

- குறைவான பயண நேரம், வாகனப் போக்குவரத்து நெரிசல் குறைவு மற்றும் வாகன உமிழ்வுக் குறைவு ஆகியவை இச்சேவையின் பயன்பாடுகளாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★